1977 ஆகஸ்ட் 6]

கேள்விகள் அனுமதித்தேன். துணைக் கேள்விகள் அனுமதிப்பதைப் பற்றிக் கவலை இல்லை. அதே நேரத்தில் விவாதத்தில் பேசும்போது பத்து நிமிடங்கள், பதினைந்து நிமிடங்கள் வேண்டுமென்று கேட்கிறார்கள். பெல் அடித்தாலும் உட்காருவதில்லை, ஒத்துழைக்க மாட்டேன் என்ற நிலைமை இருக்கிறது. இந்த நிலைமை இருக்குமானால் சபையை எப்படி நடத்துவது?

திரு. துரைமுருகன்: நான் ஒரு சப்ளிமெண்டரி கேட்பதற்கு அனுமதி கொடுக்கப்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசியமான கேள்விகளுக்குத் தாராளமாகத் தருகிறேன்.

கல்குளம் வட்டத்தில் உணவு தானியங்கள் வழங்கல்.

*26. வினா—திரு. எ. சுவாமிதாஸ்: மாண்புமிகு உணவு—கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் தாலுகா முழுவதுக்கும் அரசு கட்டாய ரேஷன் வழங்கும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்விலுள்ளதா?

மாண்புமிகு திரு. ஜி. ஆர். எட்மண்ட்: இப்பகுதிகளில் கட்டாய ரேஷன் வழங்க உத்தேசம் இல்லை. கன்னியாகுமரி மாவட்டம் தனித் தொகுதியாகப் பாவிக்கப்படுவதால், இம்மாவட்டம் முழுவதும் பொது விநியோக முறை விரிவாக்கப்பட்டுள்ளது. மற்ற மாவட்டங்களில் வழங்கப்படும் அளவை விட எல்லையோர கல்குள வட்டப் பகுதியில் அதிக அளவில் அரிசி வழங்கப்படுகிறது. தனியார், மாவட்டத்திற்குள் சில்லரை வியாபாரம் செய்வதும் தடுக்கப்படவில்லை.

திரு. ஜே. ஜேம்ஸ்: விளவங்கோடு தாலுகா முழுவதும் ரேஷன் கொடுக்கப்படுகிறது. கல்குளம் தாலுகாவில் கல்குளத்தில் கொடுக்கப்பட்டாலும் எஞ்சியிருக்கும் சில பகுதிகளில் கொடுக்கப்படவில்லை. அந்தப் பகுதிகளிலும் அரிசி ரேஷன் கொடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: சில முக்கியமான காரணங்களைக் கொண்டு அந்தப் பகுதிக்கு அரிசியை ரேஷன் கடைகள் மூலம் வழங்கத் தயாராக இல்லை.

நீலகிரியிலுள்ள கூட்டுறவு நிறுவனங்களுக்குத் தேர்தல்

* 27. வினா—திரு. கே. உச்சி: மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரியிலுள்ள கலைக்கப்பட்ட கூட்டுறவுத் துறை நிறுவனங்களுக்கு இயக்குநர்களைத் தேர்ந்தெடுக்க தேர்தல் விரைவில் நடத்தும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்போது நடைபெறும்?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்:

(அ) ஆம்.

(ஆ) தற்போது பரிசிலனையில் இருக்கும் தமிழ்நாடு கூட்டுறவு சட்ட திருத்தங்கள் மீது முடிவு செய்த பிறகு தேர்தல்கள் நடத்துவது பற்றி பரிசீலிக்கப்படும்.

திரு. கே. உச்சி: தேர்தல் வெகு நாட்களாக நடக்காமையால் அந்த நிறுவனங்களில் மேலும் மேலும் ஊழல்கள் பல வளர ஏதுவாகின்றது. ஆகையால் உடனடியாகத் தேர்தல் நடத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: 10-6-1976 அன்று அமல் செய்யப்பட்ட தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் தனி அலுவலர் நியமனச் சட்டம் 1976 சட்டத்தின்படி தனி அலுவலர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆங்காங்குள்ள குழுக்கள் கலைக்கப்பட்டிருக்கின்றன. குழுக்கள் நியமனம் செய்யப்பட்டதில் பல்வேறு தவறுகள் நடைபெற்றிருக்கின்றன என்று பல்வேறு உறுப்பினர்கள் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். இதை எப்படிச் சீர்திருத்தி அமைப்பது என்ற முறையில் அரசு ஆலோசித்து வருகிறது. அதற்கான சட்டத் திருத்தங்களைக் கொண்டு வரவேண்டுமென்று அரசு ஆலோசனை செய்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS